முழுப்பதிப்புரிமையுடையது
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
**Provincial Department of Education, Northern Province**

| 51 | T | II |
|---|---|---|

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2021**
**General Certificate of Education (Adv. Level) Examination, 2021**

| சித்திரக் கலை II<br>Art II | முன்னோடிப் பரீட்சை<br>Pilot exam | மூன்று மணித்தியாலம்<br>Three Hour |
|---|---|---|

உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள் தொகுதியை நன்றாக விளங்கிக் கொள்வதற்கு மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக. வர்ணச் சித்திரம் வரைவதற்காக உமக்கு வழங்கப்பட்டுள்ள விசேட வரைதல் தாளைப் (Drawing paper) பயன்படுத்துக. வேறு எந்தவொரு சித்திரத்தையோ பருமபடிக் குறிப்பையோ வரையத் தேவையில்லை.
விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும்போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால் அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

**இயற்கைக் கற்றலும் அசையாப் பொருட் கூட்டமும்**

பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன் கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணம் தீட்டுக.

* கடதாசிப் பரப்பினை பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
* பொருள்களினதும் செடியினதும் இயல்பு,வெளிப்புறத்தன்மை,பரிமாணம்,கண்மட்டம்,முப்பரிமாண இயல்பு தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.
* பொருள் தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன் மீது ஒளி,இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணம் தீட்டுக.
* வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.
* பொருள் தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.
* பொருள் தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
* நீர் வர்ணம்,போஸ்டர் வர்ணம்,தூள் வர்ணம்,பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(100 புள்ளிகள்)

முழுப்பதிப்புரிமையுடையது
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
**Provincial Department of Education, Northern Province** | 51 | T | II |

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2021
**General Certificate of Education (Adv. Level) Examination, 2021**

| சித்திரக் கலை II<br>**Art II** | முன்னோடிப் பரீட்சை<br>**Pilot exam** | மூன்று மணித்தியாலம்<br>**Three Hour** |
|---|---|---|

# ஆசிரியர்களுக்கு மட்டும் பொருட்கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அறிவுறுத்தல்

1. பொருட்கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் மேசை 73cm உயரமுடையதாக இருக்க வேண்டும்.
2. பொருட்கள் யாவும் கண்மட்டத்திற்கு சற்றுக்கீழாகவும் செடி கண்மட்டத்தில் இருக்குமாறு ஒழுங்குபடுத்துக.
3. ஆதாரப்பலகையினை பொருள் ஒழுங்கிற்கு ஏற்ற அளவில் பொருத்தமாக பயன்படுத்துக.
4. ஒரு பொருட்கூட்டத் தொகுதியினை வரையும் மாணவர்கள் 2.25m இற்கு குறையாத தூரத்திலும், 4m இற்கு மேற்படாத தூரத்திலும் அமர்வதை கருத்தில் கொள்க.

.



## தேவையான பொருட்கள்

1. பிஸ்கற்பெட்டி (30x 25x 11) - வெள்ளை டிமைந் தாளினால் சுற்றி ஒட்டிவிடுக.
2. தோடம்பழம் அல்லது விளாம்பழம்
3. கைபிடியுடன் கூடிய யக் (jug) - (11cm உயரம், 11cm விட்டம்)
4. சீத்தைத்துணி – (½ மீற்றர்)
5. மாபிள் தட்டு சிறிது – ( saucer – 15cm விட்டம்)
6. அரைவாசி தண்ணீர் நிரப்பப்பட்ட கண்ணாடிக்குவளை – (18cm உயரம்)
7. கண்ணாடிக் குவளையினுள் தீட்டப்பட்ட பென்சில்
8. குறோட்டன் கிளை – (பொருட்தொகுதியை வரைந்து முடிக்கும் வரை இலைகளுடனான கிளையை பசுமையாக வைத்திருப்பதற்காக கிளையை வைக்கும் யக்கினுள் நீர் ஊற்றி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்க.)
9. ஆதாரப்பலகை